மாநிலங்களுக்கான உரிமைகளை மீட்டெடுப்பதும் சுயாட்சியை பாதுகாப்பதும் கட்டாயமாகும்!

வலுவான மாநிலங்கள் மட்டுமே வலுவான இந்தியாவை உருவாக்கும்!

'தி இந்து' நாளேட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கட்டுரை!

சென்னை, ஏப். 22-

"மாநிலங்களுக்கான உரிமைகளை மீட்டெடுப்பதும் சுயாட்சியை பாதுகாப்பதுமே கட்டாயமாகும். வலுவான மாநிலங்கள் மட்டுமே வலுவான இந்தியாவை உருவாக்கும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'தி இந்து' ஆங்கில நாளேட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய கட்டுரை வருமாறு:-

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலமாக , திராவிட இயக்கம் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், அனைவருக்கும் பயனளிக்கும் ஒரு வளர்ச்சி மாதிரியை செயல்படுத்தவும் அதிகாரங்களை பரவலாக்க வேண்டியதன் அவசியத்தை வலுவாக ஆதரித்து வருகிறது. எனவே, ஒன்றிய - மாநில உறவுகள் தொடர்பான அரசியலமைப்பின் விதிகள், சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மறுஆய்வு செய்வதற்கும், மாநிலங்களின் சுயாட்சியை வலுப்படுத்துவதற்கும், நியாயமான கூட்டாட்சி சமநிலையை உறுதி செய்வதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கும் மூன்று பேர் கொண்ட உயர்மட்டக் குழுவை அமைப்பது குறித்த எனது அறிவிப்பு, மாநிலங்களில் ஒன்றியத்தின் அதிகாரித்து வரும் ஊடுருவலை பின்னுக்குத் தள்ளுவதற்கான எங்கள் தேடலின் அடுத்த தர்க்கரீதியான படியாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியா ஒரு 'மாநிலங்களின் ஒன்றியம்' என்று தெளிவாகக் கூறுகிறது. இந்த முன்னுரை மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட உள்ளார்ந்த அதிகாரங்களை எடுத்துக்காட்டுகிறது. எங்கள் கட்சியின் நிறுவனர் அண்ணா அவர்கள், மாநிலங்களவையில் நிகழ்த்திய தனது உரைகளில், ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு போதுமான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டிய தன் அவசியத்தை மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க.) அடிப்படைக் கொள்கை 'மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி'. இது சம்பந்தமாக, எங்கள் தலைவர் கலைஞர் (முன்னாள் முதல்வர் கலைஞர்) இந்த இலக்கை அடைய நீதிபதி பி.வி.ராஜமன்னார் தலைமையில் மூன்று பேர் கொண்ட ஆணையத்தை அமைத்தார்.

THE HINDU
Monday, April 21, 2025
CHENNAI
Opinion

Ensuring a fair federal balance

M.K. Stalin
Chief Minister, Government of Tamil Nadu

உரிமைகளை மிதிப்பது!

கலைஞர் நியாயமான அதிகாரப் பகிர்வுக்காகக் குரல் கொடுத்தபோது இருந்ததை விட இன்று மிகவும் மோசமான ஒரு சூழ்நிலையை நாம் காண்கிறோம். அந்தக் காலத்தில், சில அதிகாரங்கள் மாநிலங்களிடமிருந்து பறிக்கப்பட்டன. இருப்பினும், இன்று, ஒன்றியத்தில் அதிகாரத்தில் இருக்கும் பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க.) கீழ், மாநிலங்களை முடக்கி, அவற்றின் உரிமைகளை நசுக்கி, அவற்றைச் செயலிழக்கச் செய்யும் தெளிவான முயற்சி உள்ளது. மாநிலங்களின் சட்டமன்ற அதிகாரத்தைக் குறைத்து, மாநிலங்களை ஒன்றியத்திற்கு அடிபணியச் செய்ய ஒன்றிய அரசு விரும்புகிறது. மாநிலங்களின் தனித்துவமான மொழியியல் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை ஒழிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசியலமைப்பு மூன்று முக்கிய பட்டியல்கள் மூலம் அதிகாரங்களை தெளிவாக வரையறுக்கிறது: ஒன்றிய பட்டியல், மாநில பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல். ஆனால் கடந்த பத்தாண்டுகளில், பொதுப் பட்டியலில் பட்டியலிடப்பட்ட பல பாடங்கள், இயல்பாகவும் நடைமுறையிலும், ஒன்றிய பட்டியலுக்கு செயல்பாட்டு ரீதியாக நகர்த்தப்பட்டுள்ளன. மாநில பட்டியலில் பட்டியலிடப்பட்ட பொருட்களுக்கும் அதிக முக்கியத்துவம் இல்லை. பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு, மாநில பட்டியலில் தெளிவாக உள்ள பாடங்களில் சட்டங்களை இயற்றி வருகிறது. பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் வகையில், ஆளுநர்கள் மற்றும் குடியரசுத் தலைவரின் அரசியலமைப்பு அலுவலகங்களை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம், மாநிலப் பட்டியல் பாடங்களில் மாநிலங்களின் சட்டமன்ற அதிகாரங்களுக்கு எதிராக ஒன்றிய அரசு கடுமையான தடைகளை உருவாக்குகிறது. உச்ச நீதிமன்றத்தில் சமீபத்திய வரலாற்றுத் தீர்ப்பைப் பெறுவதன் மூலம் இந்தத் தடைகளை வெற்றிகரமாக நீக்கியுள்ளோம்.

ஒரு அவமதிப்பு மனப்பான்மை!

தமிழக அரசின் மாநில கல்விக் கொள்கை, ஒன்றிய அரசின் உயர்குடி தேசிய கல்விக் கொள்கைக்கு (NEP) மாறாக, சமூக நீதி, உள்ளடக்கிய தன்மை மற்றும் அனைவருக்கும் அணுகல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. NEP, இந்தியை ஒரு கட்டாய மொழியாக மறைமுகமாகத் தள்ளும் மூன்று மொழி சூத்திரத்தின் மறைமுக நிகழ்ச்சி நிரலையும் கொண்டுள்ளது. இந்த சந்தேகத்திற்குரிய வடிவமைப்பை நாங்கள் சரியாக நிராகரித்துள்ளோம். எனவே, ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் பங்கான ரூ.2,500 கோடியை நிறுத்தி வைத்துள்ளது, கிட்டத்தட்ட 42 லட்சம் மாணவர்களின் நலனில் சிறிதும் அக்கறை காட்டவில்லை. இதே இரக்கமற்ற நடத்தையை, சமீபத்தில் நமது 'நீட்' விலக்கு மசோதாவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைத் தடுத்து நிறுத்தியபோது, ஒன்றியம் வெளிப்படுத்தியது. இந்த இரண்டு முக்கிய பிரச்சினைகள் குறித்த ஒன்றியத்தின் செயல்கள் அதன் அவமதிப்பு மனப்பான்மையை எடுத்துக்காட்டுகின்றன.

உரிமைகளுக்கான போராட்டம்!

நியாயமற்ற முறையில் எல்லை நிர்ணயம் செய்யும் நடவடிக்கையை ஒன்றிய அரசு மேற்கொண்டால், அதனால் இந்தியாவுக்கு ஏற்படும் தீமைகளையும் நாங்கள் பட்டியலிட்டுள்ளோம். சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு அபராதம் விதித்து, சிறப்பாகச் செயல்படாத மாநிலங்களுக்கு ஊக்கம் அளித்தால், இந்தியாவுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் நாங்கள் பட்டியலிட்டுள்ளோம். இதுபோன்ற எந்தவொரு சாய்வான நடவடிக்கையையும் எதிர்கொள்வதற்கும், முற்போக்கான மற்றும் வளமான இந்தியா என்ற கருத்து தொடர்ந்து செழித்து வளர்வதை உறுதி செய்வதற்கும், ஒத்த எண்ணம் கொண்ட மாநிலங்களின் கூட்டணியை நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

டெல்லியில் அதிகாரத்தை அதிகரிப்பதன் மூலமும், மையப்படுத்தப்பட்ட முடிவெடுப்பதன் மூலமும் கூட்டுறவு கூட்டாட்சி என்ற கருத்தை மாற்றுவதற்கு தமிழ்நாடு ஒருபோதும் அனுமதிக்காது. பா.ஜ.க. ஆட்சியின் இந்த புதிய விதிமுறைக்கு எதிரான எங்கள் போராட்டம் தமிழ்நாட்டின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல், அனைத்து மாநிலங்களுக்கும் உரிய அதிகாரங்களைப் பெறுவதும் ஆகும். எனவே, நமது நியாயமான உரிமைகளுக்கான இந்த நியாயமான போராட்டத்தில் மற்ற மாநிலங்களும் எங்களுடன் இணையும் என்று நாங்கள் நம்புகிறோம்.

வலுவான மாநிலங்கள் மட்டுமே வலுவான இந்தியாவை உருவாக்க முடியும், அதே நேரத்தில் நாட்டின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்க முடியும் என்ற எங்கள் புரிதலில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஒன்றிய -மாநில உறவுகளில் சமநிலையை மீட்டமைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஒரு வலுவான நெறிமுறையை கட்டமைப்பது, மாநிலங்களின் உள்ளார்ந்த உரிமைகளை ஒன்றிய அரசு மிதிக்காமல் இருப்பதை உறுதி செய்யும். இந்த முக்கியமான கட்டத்தில், கடந்த காலங்களில் எப்போதும் செய்தது போல், தமிழ்நாடு மீண்டும் தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற எழுச்சி பெறும். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று வெளியிடுகிறார்! திராவிட அறநெறியாளர்

தமிழவேள் பி.டி.ராஜன் - 'வாழ்வே வரலாறு' நூல்!

அமைச்சர் – முனைவர் பழனிவேல் தியாகராசன் முன்னெடுப்பில் எழில்மிகு விழா!

சென்னை, ஏப்.22-

திராவிட அறநெறியாளர் தமிழவேள் பி.டி.ராஜன் - 'வாழ்வே வரலாறு' நூல் வெளியீட்டு விழா இன்று (22.4.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராசன் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் சி.டி.செல்வம் முதல் நூலை பெற்றுக் கொள்கிறார்.

இவ்விழாவில் டி.வி.எஸ். மோட்டார்ஸ் தலைவர் வேணு சீனிவாசன், மூத்த பத்திரிகையாளர் 'இந்து' என். ராம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல் ராஜன் நன்றி கூறுகிறார்.

அமைச்சர் - முனைவர் பழனிவேல் தியாகராசன் வேண்டுகோள்!

இவ்விழாவினைச் சிறப்புற ஏற்பாடு செய்து நடத்திடும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராசன்,

"ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும், நீதிக்கட்சியின் இறுதித்தலைவராகவும் இருந்த, எங்கள் தாத்தா 'திராவிட அறநெறியாளர் தமிழவேள் பி.டி.ராஜன் வாழ்வே வரலாறு' எனும் இந்த வரலாற்றுக் கருவூலத்தை அச்சு வடிவில் வெளியிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் இசைவு தந்திருப்பது பெரும் மன நெகிழ்வைத் தருகிறது.

என்றும் என்னுள் வாழ்கின்ற எனது தந்தையார் - பண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களும் இத்தருணத்தில் இருந்திருந்தால் மிக்க மகிழ்வடைந்திருப்பார் என்பதில் எனக்கு ஐயமில்லை.

எனது மூதாதையரின் புகழ் வாழ்வை போற்றும் கடமையை இயன்றவரை நிறைவேற்றியுள்ளேன் என்கின்ற உணர்ச்சிப் பெருக்கோடு இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு உங்களை எல்லாம் அழைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்."

- எனக் குறிப்பிட்டுள்ளார்.

'வாட்ஸ் அப்'பில் வலம் வரும் செய்தி!

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, முன்னாள் ஒருங்கிணைந்த இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாய கண்காணிப்பு குழு தலைவர் எ.செ. எத்திராசன் அவர்களின் மறைவிற்கு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, ஜெ.ஜெயபால், கல்பட்டு ராஜா, ஜி.ரவிச்சந்திரன், ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், தே.முருகவேல், வி.ஜி.பிரபாகரன், பி.கே.டி.முரளி, வே.கணேசன், கு.செல்வமணி, பி.தெய்வசிகாமணி,செயற்குழு உறுப்பினர் அப்துல் சலாம், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் விஸ்வகர்ம திட்டம் எனும் வர்ணாசிரம விசத்தை முறிக்கும் மாமருந்து!

கலைஞர் கைவினைத் திட்டத்தை தொடங்கி வைத்த முதல்வருக்குப் பாராட்டு!

ஆதித்தமிழர் பேரவை தலைவர் இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, ஏப். 22-

ஆதித்தமிழர் பேரவை தலைவர் இரா.அதியமான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைவரும் விரும்பிய தொழிலை யார் வேண்டுமானாலும் செய்து தங்களின் சமூக சமநிலை பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள கலைஞர் கைவினைத் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளதற்கு ஆதித்தமிழர் பேரவை சார்பில் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் தங்கள் சாதி அடிப்படையிலான தொழில்களில் பிணைக்கப் பட்டதிலிருந்து தப்பிக்கவும், தங்கள் குழந்தைகளுக்குச் சிறந்த வாழ்க்கை மற்றும் சிறந்த கல்வி கிடைப்பதற்காகவும் பெரும்பாலும் கிராமங்களி லிருந்து நகரங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

இவர்களை இடம்பெயரவிடாமலும் சாதிய பிணைப்பினில் இருந்து மீளாமல் இருப்பதோடு மேல் கல்விக்கு செல்லும் வயதில் வர்ணாசிரம படிநிலையை நிலை நிறுத்தும் திட்டமாகவும் RSS யின் செயல்வடிவை அமல்படுத்தும் விதமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு "விஸ்வகர்மா திட்டம் எனும் குலத் தொழிலுக்குள் தள்ளும் திட்டத்தை கடந்த 2023 ல் அறிவித்தார்கள்.

18 விதமான குலத்தொழிலை மையப்படுத்திய விஸ்வகர்ம திட்டமானது வர்ணாசிரம அடிப்படையில் சாதிக் கட்டமைப்பை கட்டிக்காக்கும் பார்ப்பனிய சித்தாந்தம்.

அதை என்ன பொய் சொல்லியும் காவிக்கும்பலால் மூடிமறைக்க முடியாது. பா.ஜ.க முன்னெடுக்கும் பார்ப்பனிய இந்துத்துவ அரசியல் என்பது பெரும்பான்மையான மக்களுக்கு எதிரானது.அது சாதிய வருணாசிரமத்தை மீட்டமைக்கும் கருவி.

அதனால் தான் சமூக அரசியல் கட்டமைப்பில் ஆர்.எஸ்.எஸ் கும்பல் ஊடுருவியிருக்கும் இன்றைய சூழலில், விஸ்வகர்மா போன்ற திட்டங்களின் மூலம் நேரடியாகவே வர்ணாசிரமம் அடிப்படையிலான சாதிக்கட்டமைப்பை வலுப்படுத்தும் விசம் என்பதைத் தடுக்கும் விதமாகத்தான் ஒன்றிய அரசு கொண்டுவந்த விஸ்வகர்மா திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட மாட்டாது என அன்றைக்கே தெரிவித்தார் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அதற்கு மாற்றாகத்தான் இங்கு எல்லோரும் எல்லாம் பெறப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் 25 வகையான கைவினைத் தொழிலுக்கு விரும்பிய யார் வேண்டுமானாலும் விண்ணப்பம் செய்து மானியமும் கடனுதவியும் பெற்றுக் கொள்ளலாம் என்று முதல்வர் அவர்களாலும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களாலும் "கலைஞர் கைவினைத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது குடும்பத் தொழிலை ஊக்குவிக்கும் திட்டமல்ல..

உயர் கல்விக்கு தடை ஏற்படுத்தும் திட்டமல்ல..

இது வர்ணாசிரமத்தை கட்டமைக்கும் சூழ்ச்சித் திட்டமல்ல.. என சம்மட்டி கொடுத்திருப்பதோடு பா.ஜ.க.ஆர்.எஸ்.எஸ். கும்பல் கட்டமைக்கும் வர்ணாசிரம விசத்தை முறிக்கும் அருமருந்து தான் "கலைஞர் கைவினைத் திட்டம் என்பதை ஆதித்தமிழர் பேரவை மகிழ்ச்சியோடு வரவேற்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.